ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகை.

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை




Vol. 10 | November, 1948 | No. 9,10

ஆசிரியர்: பண்டிட். S. M. ஸௌந்தரராஜாசாரியர்

ஸ்ரீரங்கம்.

வருஷச்சந்தா ரூ. 3—0—0

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்திரிகா

தொகுதி 10]     நவம்பர், 1948     [பகுதி 9,10


| | |
|---|---|
| 15வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம் | 215 |
| வரவு செலவு கணக்கு | 231 |
| நன்கொடைவரவு | 232 |
| தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் சேலம் கிளை | 232 |
| சரபேந்த்ரர் வைத்ய முறையில் ஸந்தேஹங்கள் | 234 |
| வேண்டுகோள்—ஆசிரியர் | 235 |
| சுகாதார இலாகா நிர்வாஹ யாதாஸ்துக் குறிப்பு | 236 |



## பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்

ஓர் மஹத்தான பிரஸித்த ரஸாயனம்.

ஹ்ருதயத்திற்கும் நாடிகளுக்கும் க்ஷணத்தில்
பலமளிக்க வல்லது.
அநேக வித நோய்களில் அனுபான விசேஷங்களால்
உபயோகமுள்ளது
இது வைத்யர்கள் யாவருமறிந்ததே
ஆனல்
மருந்தின் சக்தி உயர்வு
செய்முறைத்தேர்ச்சியையும் பரிசுத்தியையும் பொருத்ததே

எமது பூர்ண சந்த்ரோதய மகரத்வஜம்

சிறந்த சாஸ்த்ரீய முறையில் ஸ்வர்ணம் முழுவதும்
சேரும் வகையில் தயாரிக்கப் பெற்றுள்ளது.

2 Grs. மாத்திரை 12-க்கு 5-0-0 | 2 Grs. 40-க்கு 14-0-0
,, 20 7-8-0 | ,, 100 32-0-0

தந்தி:
"ATREYA"

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# பதினைந்தாவது

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனம்

## கும்பகோணம்

கடந்த அக்டோபர் 3, 4 தேதிகளில் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் கட்டடத்தில் நமது மஹாமண்டலத்தின் 15-வது ஸம்மேளனம் கூடியது. 3-10-48 அன்று காலை ஆயுர்வேதாசார்ய, வைத்திய விசாரத ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் தலைமை வஹித்தார்கள். வாஞ்சியம் ஸ்ரீ ராமசந்திரஅய்யர் அவர்களால் தன்வந்தரி பிரார்த்தனை செய்யப்பட்டவுடன், மஹாநாட்டைத் திறந்து வைக்க இசைந்திருந்த ஸ்ரீ ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் வர இயலாததால் அவருக்குப் பதிலாக சென்னை திவான் பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் மஹாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். அன்னார் தனது சொற்பொழிவில் மஹாத்மாஜீயின் அவதார வாரத்தில் மஹாத்மாஜீக்கு மிகவும் பிரியமான ஆயுர்வேதம் பற்றிய மஹாநாடு நடப்பது குறிப்பிடத்தக்கதென்றும், ஆயுர்வேதம் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் இன்றியமையாததான ஓர் வைத்திய சாஸ்திரமென்றும், லக்ஷக்கணக்கான வருஷங்களின் ஆராய்ச்சியின் பயனாக, சிறந்த நாகரீக வாழ்க்கை வாழ்ந்த நம் பெரியோர்களால் திடப்படுத்தப்பட்டு அடிப்படைத் தத்துவங்கள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள சாஸ்திரம் என்றும், இதுதான் இந்தியாவின் ஓரே வைத்திய சாஸ்திரமாக செய்யப்பட வேண்டுமென்றும் கூறி மஹாநாட்டைத் திறந்து வைத்தார்கள்.

பிறகு மஹாநாட்டின் வரவேற்புக்கமிட்டியின் தலைவரான ஸ்ரீ சிங்காரம் செட்டியார் அவர்கள் வர இயலாமையால் அவரது வரவேற்புரை ஷை கமிட்டிக் காரியதர்சி வைத்திய விசாரத, ஆயுர்

வேத சிரோமணி V. R. லக்ஷ்மீகாந்த சர்மாவால் வாசிக்கப்பட்டது. அதில் குறிப்பிட்டிருந்ததாவது:-

இந்தியனின் சராசரி வாழ்வு 25 வயது என்பது ஓர் கோரமான உண்மை. மேல் நாடுகளில் 45, 50 வயதென்பது சராசரியாக இருக்கின்றது. அத்தேசத்தினர்கள் கொடூரமான ரோகங்களை முன்னேற்பாட்டுடன் தடுக்க முயற்சிப்பதாலும் பிரசாரத்தினுல் தனித்தனியே ஒவ்வொருவரும் சுகாதார வாழ்வு வாழ வசதிகளிருப்பதாலும் ஓரளவு அவ்வளவு அதிகமான வயது வாழ முடிகின்றது. நமது முன்னோர்களும் நீண்ட வயது வாழ்ந்தார்கள் என்பதற்கு நமக்கு முன் ஓரிரண்டு தலைமுறையில் வாழ்ந்தவர்களின் வயதைக் கவனித்தலே தகுந்த சான்றாகும். அவர்கள் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சரீரம், மனது இவைகளின் நன்னடத்தை, லட்சியம் போன்றவைகளைக் கடைப்பிடித்தார்கள். நாம் அவர்கள் அனுஷ்டித்து வந்ததை அநாகரிகமெனக் கருதியதால் வெகு குறுகிய காலத்திற்குள் அயல் தேசத்தினர் நகைக்கும்படி அவ்வளவு குறுகிய வாழ்வு வாழ்கின்றோம்.

இந்தியாவில் இன்று நமது ஸமுதாய வாழ்வின் ஆரோக்கிய நிலையைச் சீர்திருத்தி அமைக்க இரண்டு காரியங்கள் செய்யப்படவேண்டும். 1. ஏழை, தனவான் என்ற பாகுபாடின்றி வியாதிக்கேற்ற சிகித்ஸை உடனே கிடைக்க உதவியளிக்கவேண்டியது. 2. ஆரோக்கியத்திற்கு அரசாங்கம்தான் பொறுப்பாளி என்று தனது ஆரோக்கியத்தில் அசிரத்தையுடன் இல்லாமல் நம்முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த அனுபவஸித்தமான ஆரோக்கிய வழிகளைப் பின்பற்றவும் ஜனஸமுதாயத்தின் மனதில் ஆரோக்கிய வாழ்வே செல்வமென ஒரு சிரத்தை ஏற்படுமாறும் பிரசாரம் செய்து அதற்கேற்ப ஆசார முறைகளைக் கற்பிக்க ஆரோக்கிய சாலைகள் ஏற்படுத்துவதே.

ஆயுர்வேத மூலம் ஜனங்களுக்கு ஸேவை புரியும் தங்களுக்கு நல்வரவாகுக.

பிறகு சென்னை தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் பேசுகையில் ஆயுர்வேத வைத்தியம் அபிவிருத்தி அடைவதற்கு பொது ஜனங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும்தான் அதிக முக்கியம். வைத்திய உதவி அளிப்பதில் ஆயுர்வேதம் ஈடற்றதென்பதில் ஸந்தேகமில்லை அது விக்ஞான ஸம்மதமா, இல்லையா என்று விசாரிப்பது அந்தந்த சாஸ்திர விக்ஞானிகளின் கடமை. ஆயுர்வேத வைத்திய உதவி கிடைக்குமிடத்து மற்றமுறை வைத்தியத்தைச் செய்து கொள்ளாதிருப்பதே ஆயுர்வேத வைத்தியத்திற்கு நாம் தரும் ஆதரவு எனப் பொது ஜனங்களைப் பூர்ணமாக ஆயுர்வேத ஸேவையில் ஈடுபடும்படி பிரார்த்தித்தார்.

பிறகு பல இடங்களிலிருந்து வந்த ஸம்மேளன வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, சென்னை பிரதமர் ஸ்ரீ ராமஸ்வாமி ரெட்டியார், கனம் டாக்டர் ராஜன், ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ மாதவ மேனன், ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் முதலானோர் தனது வாழ்த்துச் செய்திகளைத் தெரிவித்திருந்தனர். மற்றும் நமது மண்டல அங்கத்தினர்கள் சிலர் தங்கள் வரமுடியாமையைத் தெரிவித்து வாழ்த்து அனுப்பியிருந்தனர்.

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் தனது தலைமைப் பிரஸங்கத்தில் மண்டலத்தின் லக்ஷ்யங்களைப் பூர்த்தி செய்ய எல்லோருடைய ஒத்துழைப்பைக் கோரியும், இவ்வாயுர்வேத மஹாமண்டலத்தை ஸ்தாபித்தவரும் வளர்த்தவருமான மைலாப்பூர் K. ஸ்ரீ G. நடேச சாஸ்திரிகள் அவர்களின் கைலாஸ ப்ராப்தியால் நம் மண்டலத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் நஷ்டத்தைக் குறிப்பிட்டு, அன்னாரால் இயற்றப்பட்டுள்ள ஆயுர்வேதக் கிரந்தங்களை அச்சடித்துப் பிரசுரம் செய்வது முதன்மையான கடமை என வற்புறுத்தினார்.

மேலும் அவர் பேசியதாவது:-

மஹாத்மா காந்தியவர்களின் வீரஸ்வர்க்காரோகணத்

தால் நமது பாரதவர்ஷத்திற்குப் பொதுவில் பெரும் நஷ்டமென்றாலும் இந்தியக்கலைகளுக்கு இதுமகத்தான நஷ்டம். அன்னாரொருவர் தாம் நம் இந்தியப் பண்பாடுகளில் ஆழ்ந்த அபிநிவேசமுள்ளவர்.

**ஸம்மேளனத்தின் நோக்கம்:**—இதற்கு முன்பு ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்குப் பொருளாதார முறையில் அரசியல் விஷயங்களைச் சிந்திப்பதும், திட்டங்களை அரசாங்கத்தினிடம் ஸமர்ப்பிப்பதும், பயனை யாசிப்பதும் முக்கிய அலுவல்களாயின். இன்றைய நிலையில் ஆயுர்வேதாபிவிருத்தியில் திட்டம் வகுப்பதுடன் வித்வான்கள் சாஸ்திர பரிசயத்திலும் பூர்ணமான அபிவிருத்திக்கு மார்க்கத்தை நிர்ணயம் செய்தல்தான் முக்கியம்.

நமக்குப் பொருளாதார முறையில் ஸ்வதந்த்ரம் கிட்டிய பொழுதும், நமது ஸ்வதர்மம், வித்யைகள், பண்பாடு, கலைகள், இவ்வகளில் பக்தி, சிரத்தை, ஸாமர்த்தியம் இவைகள் பிரிட்டிஷாரின் ராஜ தந்திரத்தினால் மிகவும் குன்றி, மேனாட்டார்தான் விஞ்ஞானத்திலும் கலாசாரங்களிலும் உயர்ந்தவர்கள் என்ற மாறாத எண்ணம் நம்மை என்றென்றும் மேனாட்டாருக்கு அடிமையாக்கிவிட்டது. பொருளாதார விடுதலை கிடைத்தும் மானஸிக ஸ்வதந்திரம் கிடைக்காததால் உண்மை சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை எனவே கூறலாம். ஆயுர்வேதத்தைப் பற்றியவரை உண்மை சுதந்திரம் இன்னமும் உதயமாகவில்லை என்பது உண்மை.

நமது பிரதிநிதிகளான நம் அரசாங்கத் தலைவர்கள் நம் மக்களின் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்ய மேனாட்டாரின் ஆசரணைகளையும் படிப்பையுமே எதிர்பார்க்கின்றனர். இந்திய தேசீய வழியில் ஆரோக்யாபிவிருத்தியைப் பரிசீலிக்கும் எண்ணம் கூட இன்னும் ஏற்படவில்லை. சில ஆயுர்வேதாபிமானிகளின் தொந்தரவு பொறுக்காமல், அரசாங்கத்தார் ஆயுர்வேதாபிவிருத்தியை பரிசீலனை செய்ய ஸ்ரீ Col. R. N சோப்ராவைத் தலைவரா

கக் கொண்ட கமிட்டியை இந்தியா முழுவதும் சுற்றி, தனது யாதாஸ்தை தெரிவிக்கும்படி நியமித்துள்ளது. அக் கமிட்டி தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு யாதாஸ்தைத் தயாரித்து அதை பிரசுரிப்பதில் முனைந்திருக்கின்றது. இக்கமிட்டி ஆயுர்வேதத்திற்கு உபகாரமளிக்கும் வகையிலேயே தனது யாதாஸ்தை தயார் செய்திருக்கின்றது என நம்பிக்கையான தகவல் எனக்கு கிடைத்திருக்கின்றது. அது எவ்விதமிருப்பினும் அரசாங்க ஸம்பந்தமான ஆயுர்வேதத்தின் வருங்காலத்திய அந்தஸ்து பூராவும் அக்கமிட்டியின் பேனா முனையிலிருக்கின்றது.

நமது சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ராஜ்யம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், முதல் ஆரோக்கிய மந்திரி ஸ்ரீமதி ருக்மிணிலக்ஷ்மீபதி அவர்களால் இடப்பட்ட பல திட்டங்களில், இந்திய வைத்திய ஸ்கூலை காலேஜ் அந்தஸ்திற்கு உயர்த்தினதென்றதைத் தவிர வேறு ஒரு திட்டங்களும் நடைபெறவில்லை. இந்திய வைத்திய கலா சாலையிலும் மாணவர்களின் படிப்புக்கு வேண்டிய வஸதியும், ஆராய்ச்சி-ஆஸ்பத்திரிகள் வஸதியும் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. முதல் ஆண்டில் ஆயுர்வேதத்திற்காக ஒதுக்கப்பட்ட ஐந்து லக்ஷம் ரூபாய்களும் ஆயுர்வேத அபிமானமின்மையால்செலவழிக்கப்படவில்லை. இந்திய வைத்திய மத்திய போர்டின் தேர்தல் புதிய அமைப்பைப் பற்றியும் ஒன்றும் அறிய முடியவில்லை. ஆயுர்வேதத்திற்கு உபகாரமளிக்காவிடினும், நமது ஜன நாயக மந்திரிஸபை ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்குச் சட்டத்தில் புகுத்தி அதனால் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இழைக்கும் இன்னல்களைச் சொல்லி முடியாது.

வட இந்திய மாகாணங்களில் மாகாண சர்க்கார் நமது சென்னை மாகாணத்தையே அநுஸரித்து பரிசீலனைக் கமிட்டிகளை அலோபாதிக் வைத்யர்களின் தலைமையில் நிறுவி. சரமாரியாக பிரச்னைகளை அனுப்பி, ஆயுர்வேதத்தைப்பற்றி அலோபாதிக் வைத்தியர்களின் அபிப்பிராயங்களையும் சேர்ப்பதில் முனைந்துள்ளது. அமெரிக்காவிலும்

மற்ற மேனாடுகளிலும் உள்ள வைத்திய சட்ட திட்டங்களை மனதில் வைத்து ஆயுர்வேதத்திற்கு கேள்விகள் கேட்பதிலிருந்தே அன்னாரின் மனப்பான்மை நன்கு விளங்குமல்லவா ?

நமது தேசத்தலைவர்கள் தேசபக்தி மிகுந்தவர்களாயிருந்தும் இந்திய சாஸ்திரங்கள், கலை, ஆசாரங்கள், பண்பாடு இவைகளின் அப்பியாஸம் இல்லாததாலும் விதேசீய கலாசாரம், படிப்பு இவைகளில் ஊன்றித் திளைத்தவர்களானதாலும், நம் பாரதீயதர்சனங்களில் அவர்களுக்கு பற்றில்லாதது ஒரு விதத்தில் சரியே.

அத்தேசத் தலைவர்கட்கும், ஜனங்களுக்கும் ஹ்ருதயத்தில் ஊறிக்கிடக்கும் மேனாட்டு மோஹத்தைக் குறைத்து நமது கலாசாரங்களில் பக்தி ஏற்படுத்துவதும் இன்று ஆயுர்வேத வைத்தியர்களின் முக்கிய கடமையாகின்றது. இவ்விஷயத்தில் வாளாவிருந்தோமானால், ஆயுர்வேதத்தின் அபிவிருத்தி எவ்விதத்திலும் எதிர்பார்க்கமுடியாது. ஆயுர்வேதத்தின் பெருமையைப் பிரத்யக்ஷமாக நமது ஜனங்களுக்கு எடுத்துக் காட்ட பூர்ண வஸதி இல்லாவிட்டாலும், நாம் நமது ஸங்க சக்தியால் அரசியலிலும் ஸமூக ஸேவையிலும் பூர்ணமாக ஈடுபடுதல், மற்ற ஸாதனங்களை நம்மால் முடிந்தவரை ஸம்பாதித்தல் முதலியவைகளால் பொது ஜனங்களையும் அதிகாரிகளையும் நம் வசப்படுத்தி அவர்களுக்கு ஆயுர்வேதத்தின் பெருமையை உணர்த்திதானாகவேண்டும். நமக்குள் எத்தனை வித பேதமிருப்பினும் பாராட்டாமல், நமக்கு அன்னமளிக்கும் ஆயுர்வேதத்தின் அபிவிருத்திக்கு அனவரதமும் கார்யங்கள் செய்ய வேண்டும். மேலும் வைத்தியர்கள், கிராமப் பஞ்சாயத்து சபை முதல் மத்யசர்க்கார் மத்திய சட்டசபைவரை எல்லாவற்றிலும் அதிக ஸ்தானங்கள் பெற்று மற்ற அங்கத்தினர்களுக்கு நமது லக்ஷ்யத்தைப் புகட்டி அரசாங்கத்தின் அவலம்பத்தைப் பூர்ணமாகப் பெறவேண்டும். ஸமூகத்திற்கு, வகுப்பு வாதத்தினால் ஏற்படும் கலகம், கொள்ளை நோய்கள் போன்ற கஷ்டங்கள் ஏற்படும்பொழுது வைத்தியர்கள்

ஆங்காங்கு சென்று ஸேவை புரியவேண்டும். தங்கள் சிகித்ஸையின் பிரயோஜனத்தைத் தகுந்த பரீக்ஷைகளுடனும் கணக்குகளுடனும் ஜனங்களுக்கு அறிவுறுத்தி ஜனங்களிடையே ஸாதனம் பூர்ணமாகப் பெருத ஆயுர்வேதத்திலேயே ஸமூகம் இவ்வளவு உபகாரம் பெறின், பூர்ண ஸாதனத்தை அளித்தால் இதனால் நடைபெருத காரியம் ஏது? என்ற அபிப்பிராயத்தை நன்கு பதியவைக்க வேண்டும். ஆயுர்வேதம் நமது முன்னோர்களின் வைத்திய மென்றோ, இந்தியாவின் வைத்தியமென்றோ, சிகித்ஸை சிக்கனமானதென்றோ, அதிக அளவில் ஜனங்களுக்கு இன்னும் உபகாரமளிக்கின்றதென்றோ நாம் ஆயுர்வேதா பிவிருத்தியில் ஈடுபடவில்லை.

விக்ஞான முறைப்படி நிறைந்துள்ளதென்றும், என்றும் மாருத அடிப்படைத் தத்துவங்களுள்ளதென்றும், ஸ்திரமாக வியாதிகளை அகற்றுவதில் நிகரற்றதென்றும், மனஸ், சரீரம் இவ்விரண்டிற்கும் தூய்மையளிப்பதில் நிகரற்றதென்றும்தான் ஆயுர்வேதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

மேலும், ஆயுர்வேத அபிவிருத்திக்கு பூர்ணமான ஸாதனங்களை மேனாட்டிலும் இங்கும் அவ்வைத்தியர்களுக்களிப்பதுபோல் அளித்தால் இன்னும் சுமார் 25 வருஷங்களுக்குள் ஆயுர்வேதத்தை எவ்விதப் பரீக்ஷையிலும் தேர்ந்து உயர்ந்ததென பிரத்யக்ஷத்தில் காட்டுவோமென நாம் சபதம் செய்து நமக்கு உதவிகளைப் பெறவேண்டும்.

ஆயுர்வேதாபிவிருத்தியில் பலவித அபிப்ராயபேதங்களிருக்கின்றன. "உலகம் முழுவதும் ஒரே வைத்திய சாஸ்திரம் விக்ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட வேண்டு"மென சிலர் கூறுகின்றனர். "தற்சமயம் உலகம் முழுவதும் வியாபகமாயுள்ள அலோபாதிக் வைத்திய முறையே விக்ஞான ஸம்மதமாயிருப்பதால், அதையே ஏற்றுக்கொண்டு இந்திய வைத்தியங்களையும் அம் முறையில் பரீக்ஷித்து, உபயோகமான ஔஷத முறைகளை

அதனுடன் இணைத்து ஒரே வைத்தியமாக்கலாம். இம் முறையில் நான்கு ஐந்து வைத்தியங்களை போஷிப்பதற்குச் செலவிடும் தனம் மீதப்படுவதுடன், உலகம் முழுவதும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதால் ஆராய்ச்சியும் எளிதாகும்." இவ்வாலோசனையாளர் ஆயுர்வேதத்தையே ஒழித்துவிட பிரயத்னப்படுபவர்.

மற்றும் சிலர், "இந்திய வைத்தியம், ஆலோபாதிக் வைத்தியம், மற்ற வைத்தியங்கள் எல்லாவற்றையும் அதன் அதன் அடிப்படைத் தத்துவங்களை அவ்வப்படியே காப்பாற்ற எண்ணம் கொண்டவர்கள். ஆயுர்வேதத்துடன் அலோபாதிக் வைத்தியத்தையும் சேர்த்து மாணவர்களுக்குக் கற்பித்து விட்டால் காலாந்தரத்தில் எல்லாம் ஒன்றாகக் கலந்துவிடும்" என்ற அபிப்பிராயமுள்ளவர்கள். இந்நோக்கத்தில்தான் சென்னை இந்திய வைத்திய கலாசாலை நடைபெறுகின்றது. ஒவ்வொரு இந்திய வைத்தியமும் ஆயுர்வேதம், சித்தம், யூனானி என்றவை தனித்தனியே ஆலோபாதிக் வைத்தியத்துடன் கற்றுக்கொடுக்கப்படுகிறது. உற்று நோக்குங்கால்:— சித்த-ஆயுர்வேத-யூனானி முறைகள் ஒன்றுபட்டவையா? வேறுபட்டவையா? ஒன்றானால் தனித்தனி பாடக்கிரமங்கள் தேவையில்லை? வேறுபட்டவையாயினும், இந்திய வைத்தியத்தையும் ஆலோபாதிக் வைத்தியத்தையும் ஒன்றுபடுத்த முயற்சிப்பதுபோல் இவைகளை ஒன்றாக்க ஏன் முயற்சிக்கவில்லை? இம்முறையைக் கடந்த 25 ஆண்டுகளாகக் கையாண்டதில் இந்திய வைத்திய முறைகளும் தங்களுக்குள் ஒன்றாகவில்லை. அலோபாதிக் வைத்தியமும் இந்திய வைத்தியத்துடன் சேரவில்லை. ஆக இவ்வழி பயன் தரவில்லை. இதன் விளைவாக இரண்டு வேறுபட்ட சாஸ்திரங்களை உபயோகத்தில் ஸமன்வயம் செய்ய சக்தியில்லாததாலும் காலப்போக்கினாலும் மாணவர்களுக்கு இந்திய வைத்தியத்தில் அபிமானம் பரிசயம் குன்றி, அலோபாதிக் வைத்தியத்தினால் இழுக்கப்படுகிறார்கள். ஆதலால் இவ்விளைவுகளை யகற்றுவதற்குத் திட்டத்துடன், மாணவர்களுக்கு

ஆயுர்வேதத்தில் ஞானம், பரிசயம், ஸாமர்த்தியம், சிரத்தை ஏற்படும்படி ஆயுர்வேதத்தைப் போதிப்பது அவசியமாகின்றது. இங்கே கவர்ன்மெண்டு இந்திய வைத்திய பள்ளிக்கூடத்தை நமது மண்டலம் விரோத மனப்பான்மையோடு எப்பொழுதும் கண்டிக்கின்றது என்ற சிலரின் எண்ணம் முற்றிலும் தவறானது என்பதை வற்புறுத்துகிறேன். பள்ளிக்கூடத்தின் அபிவிருத்தியில் தோஷங்களை விலக்கவும் குணங்களைச் சேர்க்கவும் ஆலோசனை சொல்லுவதற்கு அதனிடமிருக்கும் ஆதரவும் அபிமானமும்தான் காரணம்.

ஆயுர்வேதம் எவ்வளவு விக்ஞானப் பெருமை பெற்றிருந்தாலும், பிரயோகஸாமர்த்தியம் மிகக்குறைந்துள்ளதால் இன்று இந்திய மக்களுக்குத் தனியே மருத்துவ வசதி அளிக்கப் போதுமானதாக இல்லை. ஆனால் ஏழை இந்தியாவில் பலவித வைத்தியங்களை வளர்க்கப் பணமில்லை. அதற்காக, ஆயுர்வேதத்தின் குறைகளையகற்றி தேவையாயிருக்கும் அம்சங்களில் இதர வைத்தியப் பிரயோகங்களைச் சேர்த்துச் சிறிது காலத்தில் இதர வைத்திய ஸஹாயமின்றியே ஆயுர்வேதத்தையே இந்தியாவின் ஒரே வைத்தியமாக்கிக் கொண்டு விடலாம். இக்காரியம் பூர்த்தியாகும் வரை இந்தியாவில் அலோபாதிக் வைத்தியத்தை வளர்ப்பதென்பது அவசியம். அதற்காக அலோபாதிக் வைத்திய திட்டத்தாலேயே வைத்திய உதவி அளிப்புத் திட்டம் போடுவது மிகவும் அறியாமையே.

## ஆயுர்வேதக் குறைவுகளை அகற்றும் வழி

இதில் அதன் கல்வித் திட்டமே மிகப் பிரதானம். விஷயவாரியாகப் பாட கிரந்தங்கள் அமைத்தலும், அக்கிரந்தங்களைத் தகுந்த கர்மாப்பியாஸ வஸதியுடன் மாணவர்களுக்கு போதித்தலும் வேண்டும். மற்ற வைத்திய சாஸ்திரங்களையும் ஆராய்ந்து, ஆயுர்வேத ஸித்தாந்தப்படி பரீக்ஷை செய்து உபகாரமளிப்பின் அவைகளை ஆயுர்வேத பரிபாஷைப்படி சேர்த்து மாணவருக்கு கற்பிக்க வேண்டும்.

உலகில் இன்றைய தினத்தில் உள்ள எல்லா சாஸ்திரங்களுக்கும் கலைகளுக்கும் பீஜரூபமான விவரணம் நமது தர்சனங்களிலும் கலைகளிலுமே அடங்கியிருக்கின்றன. ஆதலால் நவீன தர்சனங்களை ஆராய்ந்து அந்தந்த பிராசீன தர்சனப் பிரிவுகளில் ஒன்று சேர்ப்பது பண்டிதர்களுக்கு கடினமில்லை. இவ்விதம் பாரதீய தர்சனக்கலைகளிலும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் நவீன தர்சனங்களை ஆராய்ந்து உட்புகுத்தி பாரதீயதர்சனத்தையும் கலையையும் அடிப்படையாக அமைத்துக் கொண்டால்தான் இந்தியாவின் உண்மை சுதந்திரம் நிலைக்கும்.

இவ்விதம் ஆயுர்வேதம் உண்மையான அபிவிருத்தி அடைய நம் வைத்தியர்கள் ஒற்றுமையுடனும் உண்மையுடனும் எப்பொழுதும் முயற்சிக்க கோருகிறேன். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்.

பிறகு நமது மஹாமண்டலத்தின் உப தலைவரும், அரசியல் நிர்ணயஸபை அங்கத்தினருமான ஸ்ரீரங்கம் ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் மூலிகை மருந்துகள் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் மனித வர்க்கத்தின் நோயற்ற வாழ்க்கையை எந்த வைத்திய முறைகள் அளிக்க வல்லனவோ, அவ்வளவும் ஆயுர்வேத வைத்தியமென்றே தான் கருதுவதாகவும், நமது சர்க்கார் பொது ஜனங்களின் நியமனத்தாலேயே நிறுவப் பெற்றிருப்பதால் ஆயுர்வேத மூலம் பொதுஜனங்களின் நன் மதிப்பைப் பெற்றால் அதன் மூலம் சர்க்காரின் ஆதரவை சுய உரிமையுடன் அடைய நமக்கு அந்தஸ்து ஏற்படும் என்றும் பொது ஜன ஸேவையில் வைத்தியர்கள் ஈடுபட வேண்டுமென்றும் கோரினார். பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்ததும் 3–10–48 காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

மஹாநாடு பிற்பகல் கூடியபொழுது சென்னை இந்திய வைத்திய கலாசாலை பேராசிரியர் ஸ்ரீமான். V. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள், 'ஸமூக முன்னேற்றமும் சில

ஆயுர்வேத கொள்கைகளும்' என்பதுபற்றி விரிவாகப் பேசுகையில், ஆயுர்வேத வைத்தியர்களின் உதவி ஸமூகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும். தனிப்பட்ட மனிதனின் ஒவ்வொரு தசைகளிலும் எவ்வளவு தேவையாயிருக்கும் என்பதையும், வைத்தியன் மனிதனின் வாழ்க்கையை சீர் திருத்தி அமைப்பதில் எவ்வளவு பாடுபட வேண்டுமென்றும் அழகாக கோட்பாடுகளுடன் கூறினார்.

பிறகு சென்னை ஸ்ரீ K. ராகவய்யர் L. I. M. அவர்கள் 'சாரீரமும் நவீன விக்ஞானமும்' என்பது பற்றி ஆராய்ச்சியிருந்த கட்டுரையை வாசித்தார்.

அத்துடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மறுநாள் காலை 'ரஸ மணி' யைப் பற்றி ஓர் அழகிய விவாதம் நடைபெற்றது. சேலம் ஜோதிடமணி, ஸ்ரீ ராமஸாமி ஜோதிடரும், கும்பகோணம் ஸ்ரீ ஸுப்பையா வைத்தியரும் 'ரஸ மணி'யைப் பற்றிய தங்களது அநுபவத்தை விரிவாக உரைத்தார்கள்.

பிறகு தஞ்சை வைத்திய விசாரத, ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், 'ஸம்பிராப்தி' என்ற விஷயத்தைப்பற்றி ஸம்ஸ்கிருத பாஷையில் ஓர் அரிய உபந்யாஸம் செய்தார்கள். பிறகு இவ்விஷயத்தைப் பற்றி நடந்த சர்ச்சையில் சென்னை வெங்கடரமணா ஆயுர்வேத கலாசாலைப் பேராசிரியர் ஸ்ரீ V. S. வெங்கட ஸுப்பிரமண்ய சாஸ்திரிகளும், மதுரை ஸ்ரீமான் பண்டித நாராயணய்யங்கார் அவர்களும் கலந்து கொண்டு பல அரிய விஷயங்களை வெளிப்படுத்தினார்கள். ஸம்ஸ்கிருதத்தில் நடந்த அந்த சர்ச்சை மிக அழகாக இருந்தது. இத்துடன் 2-ம் நாள் காலை நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன,

அன்று மாலை, கூட்டத்தின் ஆரம்பத்தில் நமது மஹா மண்டலத்தின் பொதுக்காரியதர்சீ ஸ்ரீமான் T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் தனது காரியதர்சியின் வருஷாந்தர அறிக்கையில் 1947-ஆம் மார்ச்சு 10, 11 தேதிகளில் சிதம்ப

ரத்தில் மஹா ஸம்மேளனம் கூடியதிலிருந்து இந்த ஸம்மேளனம் வரை ஐந்து ஸ்தாயி ஸமிதிக்கூட்டங்கள் கூட்டி அப்போதைக்கப்போது கவனிக்க வேண்டிய விஷயங்களை ஆலோசனை செய்து ஆவன செய்ய முயன்றிருப்பதையும், நமது தலைவர் கனம் சுகாதார மந்திரியை பேட்டி கண்டு ஆயுர்வேதாபிவிருத்தி விஷயமாக நேரில் ஒரு யாதாஸ்தை அளிக்க பல தடவை முயற்சித்தும் முடியாது போனதைப் பற்றியும், பிறகு 1948 ஜனவரியில் மதுவிலக்குச் சட்டத்தில் ஆஸவாரிஷ்டங்களையும் சேர்த்து ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இழைத்த அநீதியைக் கண்டித்து ஒரு விஞ்ஞாபனத்தை (மெமோராண்டத்தை) நம் உப தலைவர் ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் மூலம் கனம் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டும் இதுவரை ஒரு பயனும் ஏற்படவில்லை யென்றும், 1948 மார்ச்சில் சென்னைக்கு வந்த சோப்ரா கமிட்டிக்கு, உப தலைவர் ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள், Dr. K. ராகவன், ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் இம் மூவரால் சாக்ஷியம் கூறப்பட்டதைப் பற்றியும், நமது ஸங்க சக்தி அதிகமாக்க பல உபாயங்களைத் தெரிவித்தும் மண்டலத்திற்கு நிதி போதாமையால் வைத்திய சந்திரிகை நடத்துவது சிரமமாக இருக்கிறதால் நிதி சேர்ப்பதில் அங்கத்தினர்கள் தீவிரமாக முயலவேண்டும் என்றும், மஹா மண்டலத்தின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறத் தலைவரையும், காரியதர்சியையும் 5 வருடத்திற்கொரு தடவை தேர்ந்தெடுப்பது மிகவும் உபகாரமாயிருக்கும் என்று தான் அபிப்பிராயப்படுவதாகவும் கூறி, தனக்கு ஏற்பட்டுள்ள பல வித அசௌகரியத்தால், வேறொரு காரியதர்சியை வரும் வருடத்திற்கு தேர்ந்தெடுக்குமாறு கூறி, தனக்கு மண்டல காரியங்களில் பல விதத்திலும் உபகாரம் செய்த நண்பர்களுக்கு வந்தனமும் தெரிவித்தார். பிறகு வரவு செலவு கணக்கை சமர்ப்பித்தார்.

பிறகு புதிய வருஷத்திற்கு கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர். ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜசாஸ்தி

ரிகள். உப தலைவர்கள். ஆயுர்வேத ஸேவாப்ரவீண ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீரங்கம். தர்மரக்ஷாமணி ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர், சென்னை. ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ N. மாதவமேனன், சென்னை. காரியதர்சி ஸ்ரீ V. R. ஸுப்பிரமண்ய அய்யர், திருச்சி உபகாரியதர்சி ஸ்ரீ A. ராகவராவ் A. L. I. M. திருச்சி. பொக்கிஷதார், பண்டித P. S. ராமசர்மா, பரூர். வைத்திய சந்திரிகை ஆசிரியர், பண்டித S M. ஸுந்தரராஜாசாரியர், ஸ்ரீரங்கம்.

இதர அங்கத்தினர்கள்:- தஞ்சை ஜில்லா. 1. M சங்கர வைத்தியர், தஞ்சை. 2. ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா, கும்பகோணம். 3 ஸ்ரீ M. V. லக்ஷ்மண சாஸ்திரி, திருவாரூர். 4. ஸ்ரீ L. ராஜாவையா, மன்னார்குடி. 5. ஸ்ரீ ஸுப்பைய வைத்தியர், கும்பகோணம். 6. ஸ்ரீ T. S. ஸ்ரீனிவாஸய்யர், மாயவரம்.

திருச்சி ஜில்லா. 1. ஸ்ரீ S. R. வரதராஜலு நாயுடு, ஸ்ரீரங்கம். 2. ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

ராமநாதபுரம். 1. ஸ்ரீ D. ஸ்ரீனிவாஸ அய்யர், ராமேச்வரம். 2. ஸ்ரீ K. கோவிந்தராஜலு, ராமநாதபுரம்.

மதராஸ், செங்கல்பட்டு ஜில்லா. 1. Dr. K. ராகவ அய்யர், L. I. M. மாம்பலம். 2. ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸராவ், சிந்தாத்ரிபேட்டை. 3. ஸ்ரீ K. ஸ்ரீனிவாஸராவ், மைலாப்பூர். 4. ஸ்ரீ C. M. சிவஸுப்பிரமண்ய அய்யர், A. L. I. M. திருவல்லிக்கேணி. 5. ஸ்ரீ V. S. வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரிகள், மைலாப்பூர். 6. ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், M.A., L. I. M. மைலாப்பூர்

திருநெல்வேலி. 1. ஸ்ரீ L. ஸ்ரீனிவாஸன், கல்லிடைக்குரிச்சி.

மதுரை. 1. பண்டிட் S. நாராயணய்யங்கார். 2. T. S. ஸுப்பிரமண்ய அய்யர், மதுரை.

கோயம்புத்தூர். 1. ஸ்ரீ P. S. A. சர்மா, பொள்ளாச்சி

2. ஸ்ரீ C. K. விசுவநாத அய்யர், கோயம்புத்தூர். 3. ஸ்ரீ K. R. சுப்பராவ், ஈரோடு.

சேலம் 1. ஸ்ரீ T. P. C. சர்மா. 2. ஸ்ரீ S. A. ஸஞ்சீவி.

தென்-வடஆற்காடு. 1. P. V. தேவராஜ முதலியார், திருப்பாதிரிப்புலியூர். 2. P. S. ஸ்ரீனிவாஸய்யர், சிதம்பரம். 3. ஸ்ரீ வெங்கடேசன், திண்டிவனம். இவர்கள் மண்டலத்தின் கார்யங்களையும், பிரசாரங்களையும் தீவிரமாக நடத்தி நிறைவேற்றி வரக் கோரப்பட்டார்கள். மண்டலத்தின் பத்ரிகையான வைத்திய சந்திரிகை ஒன்றே நமது ஸமூகத்திற்கு உழைக்கக்கூடியதாகையால் அதை நிறுத்தாது அவசியம் நடத்த வேண்டுமென்றும், அதற்காக சந்தாவையும் ரூ. 5 வருடச்சந்தாவாகத் தீர்மானிக்கப்பட்டு இச் சந்தா விகிதம் 1949-ஆம் ஜனவரி முதலாகவே அனுஷ்டானத்திற்கு வருமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த மகாநாட்டை சென்னையில் நடத்துமாறு சென்னை ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் கேட்டுக்கொண்டு பேசுகையில், நமது மண்டலம் அகில இந்தியாவிலும் சர்க்காருக்கு உதவியாக ஆயுர்வேதத்தின் சட்ட திட்டங்களை நிர்ணயிக்கும் சபையாக மாறும்படி இதன் தரத்தை உயர்த்த நாம் மிகவும் பாடுபட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

1. மகாத்மா காந்தி, பிரம்மஸ்ரீ K. G. நடேசசாஸ்திரிகள், ஸ்ரீ S. ஸுப்பிரமண்ய சாஸ்திரிகள், (நமது மண்டலத்தின் பிரதான நிர்வாஹியான ஸ்ரீ P. S. ராமசர்மாவின் தகப்பனர்) இவர்கள் காலமானதைக் குறித்து மகாநாடு அனுதாபம் தெரிவிக்கிறது.

2. கர்னல் சோப்ரா தலைமையில் நியமிக்கப்பட்ட இந்திய வைத்திய பரிசீலனைக் கமிட்டியின் யாதாஸ்தை சீக்கிரம் பிரசுரிக்கும்படி இந்திய சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறது.

3. 30-3-48ல் G. O. No. 1000 P. H. 6-7-48ல் G. O. No. 2271 சர்க்கார் சட்டங்களை பலமாகக் கண்டிப்பதுடன் ஸ்தல ஸ்தாபனங்களின்கீழ் வேலை செய்யும், L. I. M. அல்லாத வைத்தியர்களுக்கும் கிளாஸ் வித்யாஸ மில்லாமல் சம்பளமும், சர்வீஸ் படி சம்பள உயர்வும் கொடுக்காததையும், முன் G. O. அமுலிலிருக்கும் பொழுது கொடுக்கப்பட்ட ரூ. 400க்கு மேலுள்ள துகையை திருப்பிப் பிடித்துக் கொள்ள உத்திரவிட்டதையும் குறித்து இச்சம்மேளனம் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறது. மறுபடியும் இவர்களுக்கு மட்டுமாவது இச்சலுகைகளை திருப்பிக் கொடுக்கவேண்டுமென இத்தீர்மானம் கேட்டுக் கொள்ளுகிறது. மேலும் மதராஸ் ஆயுர்வேத கலாசாலை வெங்கடரமண ஆயுர்வேத கலாசாலை போன்ற சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலைகளில் 4 வருஷம் தேர்ச்சி பெற்று நீண்டகால ஊழியத்திலிருப்பவர்களுக்கு A கிளாஸ் வைத்தியர்களைப் போலவே சம்பளமும் மற்ற சலுகைகளும் கொடுக்கவேண்டும். இத்தீர்மானத்தை சுகாதார மந்திரியை பேட்டி கண்டு தெரிவிக்க சென்னை ஸ்ரீ K. பாலஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர், ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களை பிரார்த்திப்பதுடன், இத்தீர்மானத்தை அவர்கள் அமுலில் கொண்டுவர முயற்சிக்கக் கோருகிறது.

4. 1948 ஜூன் மாதத்தில் நடந்த மந்திரி சபை விசேஷக் கூட்டத்தில் மதுவிலக்குச் சட்டத்தில் ஆஸவாரிஷ்டங்களை புகுத்தலாமா; கூடாதா என்று புனராலோசனை செய்ததற்காக வந்தனம் தெரிவிப்பதுடன், ஆஸவாரிஷ்டங்களை மதுவிலக்குச் சட்டத்திலிருந்தும் விலக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

5. ஆனரபில், V. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களால் 1905ம் வருடம் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடரமண ஆயுர்வேத கலாசாலையும் வைத்திய சாலையும் ஆயுர்வேதாபிவிருத்தியையே நோக்கமாகக் கொண்ட சாஸ்திரசிக்ஷை, கர்மபரிசயம் வழியாக சிறந்த ஆயுர்வேத வைத்தியர்களைத்

தயாரித்து தொண்டு செய்வதைப் பாராட்டி மேலும் சாஸ்திர கர்ம பரிசயத்திற்கு விசேஷ பயிற்சி ஏற்படுத்த பூர்ண வஸதிகளை ஏற்படுத்தி ஒரு ஆதர்ச (model) கலாசாலையாக அதை நிறுவ வேண்டுமென்று அக்கலாசாலை நிர்வாஹிகளைக் கேட்டுக்கொள்ளுகின்றது

6. சுமார் 27 வருஷ காலமாக நன்றாக நடந்து வந்த புதுக்கோட்டை ஸமஸ்தான ஆயுர்வேத வைத்யசாலையும் தஞ்சை முனிஸிபாலிடி ஆயுர்வேத வைத்யசாலையும், தற்சமயம் மூடப்பட்டதைக் கண்டித்து உடனே அதைத் திறந்து பொது ஜன நன்மை புரியுமாறு ஸம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. ஆயுர்வேதம், ஆயுர்வேத வைத்தியர்கள் இவர்களின் தன்மதிப்பைக் கெடுக்குமளவில் அநேக போலி ஸ்தாபனங்கள் பாத்ராபாத்ரம் அறியாது பட்ட மளிக்கும் வகையைக் கண்டித்து, அப்பட்டங்களை வைத்தியர்கள் ஏற்கக்கூடாதெனத் தீர்மானிக்கிறது.

தீர்மானங்கள் நிறைவேறியதும் கரூர் பண்டித P. S. ராமசர்மா அவர்கள் 'கிருத்யநிவேதனம்' என்ற விஷயத்தைப்பற்றி விரிவாக இனிய ஸம்ஸ்கிருத பாஷையில் அழகாகப் பேசினார்கள். அன்னாரின் உபன்யாஸம் ஸபையோர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. பிறகு தலைவரின் முடிவுரையுடனும் வரவேற்புக் கமிட்டி காரியதர்சியின் வந்தனோபசாரத்துடனும் ஸம்மேளனம் இனிது முடிந்தது.

மங்களம்.

# 10–3–47 முதல் 2–10–48 வரை வரவு செலவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 10-3-47ல் கையிருப்பு ரொக்கம் | 30 | 7 | 8 |
| பாங்கில் டிபாஸிட் | 29 | 14 | 0 |
| அங்கத்தினர் கட்டணம் சந்தா | 948 | 9 | 0 |
| நன்கொடைகள் | 561 | 0 | 0 |
| விளம்பரங்கள் மூலம் | 131 | 0 | 0 |
| ஸ்ரீ விலாஸம் பிரஸிற்கு அச்சடித்ததற்கு கொடுபட வேண்டியது | 409 | 5 | 0 |
| | 2110 | 3 | 8 |

| | | | |
|---|---|---|---|
| அச்சடிப்பு கூலி பேபர் முதலியவை | 1863 | 5 | 0 |
| தந்தி, தபால் செலவு | 92 | 0 | 6 |
| ஸ்டேஷனரி | 18 | 9 | 0 |
| பிரயாண செலவு | 5 | 12 | 0 |
| பாங்கு கமிஷன் செலவு | 0 | 8 | 0 |
| அகில இந்திய மஹாமண்டலத்துடன் இணைப்பிற்கு செலவு | 15 | 4 | 0 |
| கையிருப்பு ரொக்கம் | 84 | 15 | 2 |
| பாங்கு டிபாஸிட் | 29 | 14 | 0 |
| | 2110 | 3 | 8 |

ஸ்தாயிஸமிதியில் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது.

ஸம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்டது.

21–0–48 V ஸுப்பிரமண்ய அய்யர்.

4–10–48 V. B. நடராஜ சாஸ்திரி, தலைவர்.

# நன்கொடை வரவு

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் | 130 | 0 | 0 |
| ஸ்ரீ V. R. ஸுப்பிரமண்ய அய்யர் | 90 | 0 | 0 |
| ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியர் | 85 | 0 | 0 |
| ஸ்ரீ P. S. ராமசர்மா | 50 | 0 | 0 |
| ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி | 50 | 0 | 0 |
| ஸ்ரீ V. ஸுப்பிரமண்ய அய்யர் | 40 | 0 | 0 |
| ஸ்ரீ A. ராகவ ராவ் | 40 | 0 | 0 |
| ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரியும் ஸ்ரீ K. ராகவய்யரும் | 30 | 0 | 0 |
| ஸ்ரீ V. R. லக்ஷ்மீகாந்த சர்மா | 20 | 0 | 0 |
| ஸ்ரீ M. துரைஸாமி அய்யங்கார் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸராவ் | 10 | 0 | 0 |
| ஸ்ரீ D. ஸ்ரீனிவாஸய்யர் | 4 | 0 | 0 |
| ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர் | 2 | 0 | 0 |

இவர்களுக்கு நமது நன்றி.

# தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்

## சேலம் கிளை.

## ஏழாவது கூட்டம்

1. 26–9–48ல் சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவியின் தலைமையில் கூடி 15-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹா சம்மேளனத்திற்கு கும்பகோணத்துக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அவரவர்கள் சொந்தச் செலவில் போகலாமென தீர்மானிக்கப்பட்டது.

2. டாக்டர் S. A. சஞ்சீவி, டாக்டர் பழனியப்பா, சித்த வைத்திய பண்டிட் S. V. R. கண்டர், வைத்தியர் ராமலிங்கம் முதலியோர்களால் "நாட்டு வைத்தியமும்,

நமது கடமையும்'' என்பது பற்றி தெளிவாகவும் விரிவாக வும் பேசி சர்ச்சை நடத்தப்பட்டது.

3. காந்திஜீயின் ஜயந்திக்காகவும், கும்பகோணம் சம்மேளன சார்பாகவும் 3-10-48 ஞாயிறன்று விசேஷக் கூட்டம் கூடத் தீர்மானம் செய்யப்பட்டது.

4. இதுவரை ஒவ்வொரு கூட்டமும் பிரதி ஆங்கில மாதம் கடைசி ஞாயிறு 4-மணிக்குக் கூடியதை இனி ஒவ் வொரு மாதக் கடைசி சனிக்கிழமை கூட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு காரியதர்சி பழனியப்பா வந்தனோபசா ரம் கூற, கூட்டம் இனிது முடிந்தது.

## 3—10—48ல் காந்திஜீ ஜெயந்தி விசேஷக் கூட்டம். (8)

தன் வாழ்நாள் முழுதும் தேசசேவைக்காக அர்ப்பித்த வரும், இதனால் தன் சமூகத் தலைவர்களால் பல இன்னல் களுக்கு ஆளாகியும் தேசபக்தியைக் கைவிடா தேச பக்தர் ஜனப். சவுக்கார் கௌஸ் மொஹைதீன் சாயபு அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் காந்திஜீயைப்பற்றி கூறிய பின் சங்கத் தலைவர் டாக்டர் S. A. சஞ்சீவி அவர்களால் காந்திஜீ வாழ்க்கை, உபவாச தத்வமும் ஆயுர்வேதமும் என்பன பற்றியும், வைத்தியர் ராமலிங்க முதலியார் அவர் களால் காந்திஜீயின் நோக்கங்கள், உபதேசங்களும் நமது கடமை என்பது பற்றியும், டாக்டர் R. K. பழனியப்பா அவர்களால் மகாத்மாஜீயின் தத்வம், சுகாதாரம் என்பன பற்றியும், சிவராஜயோகி S. பொன்னுசாமி செட்டியார வர்கள் காந்தியடிகளின் மேன்மை என்பது பற்றியும், உப காரியதர்சி டாக்டர் S. அனந்தராமன் அவர்களால் காந்தி ஜீயும் பொது ஜனங்களும் என்பது பற்றியும், திரு. K. S. இரங்கசாமி கவுண்டர் அவர்களால் காந்திஜீயின் தத்வ மும். வைத்தியர்கள் நடந்துகொள்ள வேண்டியவை என் பது பற்றியும் மிக விரிவுபட பேசியபின் தலைமை தாங்கிய ஜனுப் கௌஸ் சாஹேப் அவர்கள் காந்திஜீயின் வாழ்க் கைத் தத்வத்தை விளக்கிக்கூறி, நபி நாயகம், இயேசு கிறிஸ்து போன்று மகாத்மா காந்தியடிகளும் அவதார புருஷரே எனவும் கூறினர். பிறகு டாக்டர் சஞ்சீவி அவர்

களாலும் டாக்டர் பழனியப்பா முதலியோர்களாலும் சென்னை ஆயுர்வேத ஆசிரமத்தில் சர். சி. பி. ராமசாமி அய்யர் பேசியதைப் பாராட்டியும், நம் 15வது சம்மேளனம் வெற்றிகரமாக நடைபெறவேண்டப்பட்டது.

பிறகு தலைவர் ஜனுப் சாஹேப் அவர்களுக்கு மாலை யணிவித்து கௌரவிக்கப்பட்டு பிறகு காரியதர்சி வந்த னோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

## சரபேந்த்ரர் வைத்ய முறையில் ஸந்தேஹங்கள்

மின்னக்கல், வைத்யசேகர K. S. சிவாமிருதம் எழுது கிறார்:–

1. 'மலட்டுப் புழு விழ' யோகத்தில், (Vol. 10- No. 6, 7ல்)

மருந்து வகைகள் சம எடை என்றிருப்பதால் ஒரு மருந்தின் எடை எவ்வளவு? பால் அளவு என்ன? மருந்து கொடுக்கும் காலம் மாதாந்தர விலக்க காலங்களிலா அல்லது மற்றைய நாட்களிலா?

3. "கர்ப்ப முண்டாக" யோகத்தில்

பிரம்மி இலை ரஸம் அரைப்படி என்பது பட்டணம் பக்காவிலா? சிறிய படியிலா? அந்த ரஸத்தில் எந்த அளவு, எவ்வளவு வேளை தினம் உபயோகிக்க வேண்டும்? கொடுக்கவேண்டிய காலம் விலக்க நாட்களிலா, மற்றைய நாட்களிலா?

4. "கர்ப்ப விருத்திக்கு"

எத்தனை நாட்கள் உபயோகிக்க வேண்டும்? பால், பனைவெல்லங்களின் அளவு என்ன?

7. "நஞ்சு பிரிய" யோகத்தில்

பருத்தி இலை, காடிகளின் அளவு என்ன? எவ்வளவு எடை உபயோகிக்க வேண்டும்?

8. "பால் சுரக்க"

பாதிரிவேர் தினம் ஒன்றுக்கு எவ்வளவு வேளை என்ன அளவு?

# சந்த்ரிகை அன்பர்களுக்கு வேண்டுகோள்

உலகில் ஒவ்வொரு ஸமூகமும் ஸ்தாபனமும் தான் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று நினைப்பது இயற்கையே. அப்படி முன்னேற்றம் அடைய வேண்டுமானால் தன்னுடைய உண்மை நிலையைத் தெரியப்படுத்துவதுடன் பிறர் தன்மீது சொல்லக்கூடிய பழிகளை விலக்கி ஜனங்களிடையே பிரசாரம் செய்வது மிக மிக அவசியம். இதற்கு ஸாதனமாகவுள்ளது இக்காலத்தில் பத்ரிகையே என்பதில் ஒருவருக்கும் அபிப்பிராயபேதமிருக்கக் காரணமில்லை.

வாழ்க்கைக்குவேண்டிய எல்லாப் பொருள்களும் ஒன்றுக்கு மூன்று முதல் ஐந்து மடங்கு வரை விலை வாசிகளில் ஏறியிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இது போலவே பத்ரிகைத் தொழிலிலும் எல்லா சாமான்களும் மிகவும் விலை ஏறியிருப்பதனால் அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, இக்காலத்தில் ஒரு பத்ரிகை நடத்துவதானால் மிகவும் சிரம சாத்யமாயிருப்பதுடன் நிதியும் வேண்டியது அவசியமாகிறது. சந்தா செலுத்துபவர்களைக் கொண்டே பத்ரிகை நடத்துவதும் இயலாத காரியம் என்பது அனுபவசாலிகள் அறிந்த விஷயம். விளம்பரம் முதலிய வியாபார முறைகளாலேயே பல பத்ரிகைகள் நடந்து வருவதை நாம் பார்த்து வருகிறோம், சில விக்ஞானப் பத்ரிகைகள் விளம்பர வழிகளை எதிர்பார்க்க முடியாது; எனவே அவைகள் அபிமானிகள் அபிமானத்தாலும் சிறந்த நன்கொடைகளாலுமே முன்னேறி வருகின்றன. நிற்க,

நமது வைத்ய சந்த்ரிகைக்கு சந்தாதார்களும், அபிமானிகளுமே கைம்முதல். வேறு நிதியில்லை என்பது மட்டுமல்லாமல் கொடுக்க வேண்டிய பாக்கிகூட இருப்பது பிறிதொரு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கணக்கு விவரங்களினால் அறியலாம். இந்தக் காரணத்தினாலேயே நமது சந்த்ரிகை இரண்டுமாத காலமாக வெளிவர இயலவில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்தாமலிருப்பதற்கில்லை.

சென்ற வருஷம் சில அன்பர்கள் தாமாகவே நன்கொடை அளிக்கவும் முன் வந்தார்கள். அம்மஹான்களின் விவரங்களையும் மற்றொரு இடத்தில் பார்க்கலாம். அவர்கள் இதுவரை

அளித்ததற்கு எமது மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் சக்திக்குத் தக்கவாறு உபகரிக்க வேண்டுகிறோம்.

"ஐச்வர்யம் உள்ளவர்கள் பொற்காசுகள் அளியுங்கள்; ஸௌகர்யமில்லாதவர்கள் சில காசுகள் அளியுங்கள்" என்று சொன்ன கவியின் வார்த்தையைக் கருத்தில் கொண்டு தங்களாலும் தங்கள் நண்பர்களாலும் எவ்வளவு தூரம் உபகரிக்க முடியுமோ; அவ்வளவும் உபகரித்து நமது சந்திரிகையை எப்போதும் பூர்ண பிரகாசத்துடன் பிரகாசிக்கச் செய்ய வேண்டியது அன்பர்களின் கடமை என்பதைத் தெரியப்படுத்திக் கொண்டு இத்துடன் நிற்கிறோம்.

---

## சுகாதார இலாகா நிர்வாஹ யாதாஸ்துக் குறிப்பு.

*19—10—48*

பிரஸ்தாப வருஷத்தில் விலைவாசிகள் அதிகமாக இருந்தபோதிலும் மிகக் கஷ்டமான நிலைமை ஏற்பட்ட போதிலும் மாகாணத்தின் பொது ஆரோக்யம் மொத்தத்தில் த்ருப்திகரமாயிருக்கிறது.

| | 1946<br>1000க்கு | 1947<br>1000க்கு |
|---|---|---|
| ஜனன விகிதம் | 31·62 | 32·72 |
| மரண விகிதம் | 18·88 | 20·06 |
| சிசு மரணம் | 146·88 | 146·77 |
| தாய் மரணம் | 7·94 | 8·34 |

| | | |
|---|---|---|
| காலரா | 753 | 12,743 |
| வைசூரி | 7923 | 2650 |
| பிளேக் | 2854 | 2718 |
| பலவித சுரம் | 248663 | 25820 |
| சீதபேதியும் வயிற்றுப் போக்கும் | 62681 | 75719 |
| அம்மை தடுப்பு மருந்து பிரயோகித்தது | 8584105 | 4881375 |

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

தலைவர். ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய, ஆத்ரேயாச்ரமம், தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.

பொதுக்கார்யதர்சி:

ஸ்ரீ. V. R. ஸுப்ரஹ்மண்ய அய்யர், "பாரத்வாஜ ஆச்ரமம்" ஆண்டார் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

மண்டல ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் பொதுக்காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மண்டல அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 5

(ஜனவரி முதல் டிஸெம்பர் வரை (Calender Year)

**மண்டல அங்கத்தினர்களுக்கு மண்டலத்தின் பத்ரிகையான வைத்ய சந்த்ரிகை தனிக் கட்டணமின்றி அனுப்பப்பெறும்,**

சந்தா அனுப்பவேண்டிய விலாஸம்:—

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.

**உப கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், 17, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சிராப்பள்ளி.**

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் உபகார்யதர்சிக்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீ S. M. ஸுந்தரராஜாசாரியர்,

**ஆசிரியர்—"வைத்ய சந்திரிகா" ஸ்ரீரங்கம்.**

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுதவேண்டும்.

**குறிப்பு:** சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் விஷயங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்பவேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்படவேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்தர்யம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பிப் பெற வேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்பட வேண்டும்.

# வைத்தியர்களுக்கு அறிவிப்பு

சாஸ்திர முறைப்படி கஞ்சா & அபின் சேர்த்து அடியிற் கண்ட மருந்துகள் தயாரிப்பதற்கும் வியாதிகளின் பேரில் விநியோகிப்பதற்கும் ரிஜிஸ்டர் & லைசென்ஸ் பெற்ற வைத்தியர்களுக்கும் சப்ளை செய்வதற்கு லைசென்ஸ் பெற்றது.

## தீரும் வியாதிகள்.

எந்த மருந்தினாலும் தீராதென கைவிடப்பட்ட கிராணி, அதிசாரம், சீதரத்தவயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பு, தூக்கமின்மை முதலிய நரம்பைப் பற்றின. வியாதிகளுக்கு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை உபயோகிக்கக்கூடிய மிகச் சிறந்த மருந்துகள்.

### 1. வாழைப்பூ வடகம்

கஞ்சா சம்பந்தம். சிறு சுண்டைக்காய் அளவு ஒரு தோலா எடைக்கு சுமார் மாத்திரை 32க்கு ரூ 1—0—0

### 2. கபாட மாத்திரை

கஞ்சா & அபின் சம்பந்தம். குண்டுமணி அளவு ஒரு தோலா எடைக்கு சுமார் மாத்திரை 100க்கு ரூ 2—8—0

### 3. கபாட வடகம்

அபின் சம்பந்தம். மிளகு அளவு ஒரு தோலா எடைக்கு சுமார் மாத்திரை 100க்கு 3—0—0

ரிஜிஸ்டர் & லைசென்ஸ் பெற்ற வைத்தியர்களுக்கு 100க்கு $12\frac{1}{2}$ கமிஷன் கழித்து அனுப்பப்படும்.

அட்வான்ஸுடன் ஆர்டர். வி. பி. வேறு.

**லைசென்ஸ் பெற்று தயாரிப்பவர்:—**

S. V. இராஜரத்தினக் கண்டர் R. I. M. P.
ராஜ சித்த வைத்தியசாலை,
சேர்மென் தம்மண்ண செட்டி ரோடு,
அரிசிபாளையம், சேலம்.

# திருச்சி

## ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்.

17, சின்னக்கடைத்தெருவு,

தெப்பக்குளம், P.O. திருச்சிராப்பள்ளி.

வைத்தியர்களுக்கு எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும். விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

## P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும் போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம், எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

## ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,

கரூர், S. I. Ry.,


Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.